குடிமக்கள் ஊடக வேலைத்திட்டம்
ஊடகப் பிரிவு
மாற்றுக் கொள்கைகளுக்கான
நிலையம்
நான்காவது இதழ்
ஒக்டோபர் 2007

vikalpa
විකල්ප
மாற்று வழி

# குடிமக்கள் ஊடகவியலாளர்கள் பர்மாவில் மிலிடரி தடையை உடைத்தெரிந்தனர்

பர்மாவில் கடந்த மாதம் முழுவதும் ஏற்பட்ட மக்கள் எழுச்சி மற்றும் மிலிடரியின் மக்கள் மீதான அடக்குமுறை ஆகியவற்றை அறிக்கையிடும்போது குடிமக்கள் ஊடகவியலாளர்கள் பெற்றுக்கொடுத்த அபரிதமான பக்களிப்புடன், குடிமக்கள் ஊடகம் ஏற்படுத்தும் அழுத்தம் குறித்து உலகம் புதிதாக சிந்திக்க ஆரம்பித்துள்ளது. உண்மையிலேயே குடிமக்கள் ஊடகத்தின் யதார்த்தமான பங்களிப்பு தொடர்பாக புதிதாக அர்த்தத்தைப் பெற்றுக் கொடுக்கவும் சிலர் முன்வந்துள்ளனர்.

இதே போன்றதொரு மாபெரும் மக்கள் ஆர்ப்பாட்டமொன்று 1988ஆம் ஆண்டு இடம்பெற்றது. 3000இற்கும் அதிகமானோர் இப்போராட்டத்தில் கொன்று குவிக்கப்பட்டனர். இருந்தும் அச்சந்தர்ப்பத்தில் சகல சர்வதேச ஊடகங்களுக்கும் இரும்புத் திரை போட்ட மிலிடரி நிர்வாகத்தினர் வீதிகளில் ஓடிய இரத்த ஆற்றை முடிந்தவரை உலகின் கண்களில் படாமல் மூடி மறைத்தனர். இந்த இடைப்பட்ட இரண்டு தசாப்த காலத்துக்குமிடையில் தொலை தொடர்பு தொழில்நுட்பம் அடைந்துள்ள முன்னேற்றம் அளப்பரியது. மூர்க்கத்தனமான பெஸிஸ்ட் ஆட்சியிலும் கூட தகவல் பரிமாற்றத்தை நிறுத்த முடியாதுள்ளது. வலைப்பின்னல் இணையத்தளம் மற்றும் கமராவுடனான கையடக்கத் தொலைபேசி ஆகியவற்றின் மூலம் பர்மாவில் இடம்பெறும் சம்பவங்கள் தொடர்பாக செய்திகளும் வீடியோ காட்சிகளும், புகைப்படங்களும் அளவில்லாமல் சர்வதேச ஊடக நிறுவனங்களுக்குக் கிடைத்துள்ளது. இதனால் பர்மாவின் ஜனநாயக விரோத இராணுவ நிர்வாகத்துக்கு எதிராக மிகப் பாரிய அளவில் சர்வதேச கருத்துக்களை கட்டியெழுப்ப சந்தர்ப்பத்தை உருவாக்கியுள்ளது. அதேபோல் சீனா உட்பட பர்மாவில் மிலிடரி ஆட்சி நிலைக்க உதவியளித்த நாடுகளுக்கு எதிராக அழுத்தங்களைக் கொடுக்கவும், பர்மா ஆட்சியாளர்களின் மோசமான நடவடிக்கைகள், குடிமக்கள் ஊடகவியலாளர்கள் மூலம் உலகுக்கு எடுத்துக் காட்டுதலாகும்.

குடிமக்கள் ஊடகத்துக்கு தொழில்சார் ஊடக எல்லையையும் தாண்டிச் செல்ல முடியும் என்றும், பாரிய தணிக்கையை விதிக்கும் சந்தர்ப்பங்களிலும் கூட தடையையும் மீறி உலகத்துக்கு உண்மையை உணர்த்த முடியுமென்பதையும் பர்மாவின் சம்பவங்களுடன் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பர்மா அரசு அநேக வெளிநாட்டு ஊடகவியலாளர்களை நாட்டுக்குள் பிரவேசிக்க விடாமல் பாதுகாப்பை பலப்படுத்தியிருந்தது. இருந்தும் அந்த ஊடகவியலாளர்கள் பர்மாவின் சம்பவங்களை இந்தியா அல்லது தாய்லாந்து ஆகிய நாடுகளில் தங்கியிருந்து செய்திகளை சேகரிக்க வேண்டியிருந்தது. அவர்களது முக்கிய செய்தி மூலமாகவிருந்தது பென் கோனில் (முன்னர் ரங்கூன்



*கென்ஜி நகாய் ஊடகவியலாளர் மீது துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்ட போது*



*போராட்டக்காரர்கள் மீது இராணுவத் தாக்குதல்*



*ஊர்வலக்காரர்கள் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்திய போது*

என அழைக்கப்பட்ட பர்மாவின் தலைநகர்) வீதி வழியாக எதிர்ப்பு ஊர்வலங்களில் ஆயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு இடையில் இருந்து குடிமக்கள் ஊடகவியலாளர்களினால் அனுப்பப்பட்ட குறும் செய்தி (sms) மற்றும் வீடியோக் காட்சிகள் அல்லது புகைப்படங்களே.

கென்ஜி நகாய் என்ற ஜப்பான் நாட்டு புகைப்பட ஊடகவியலாளருக்கு பர்மா இராணுவ வீரர் ஒருவர் துப்பாக்கியால் சுடும் காட்சியை குடிமக்கள் ஊடகவியலாளர் ஒருவர் வீடியோவில் பதிவுசெய்து முழு உலகுக்கும் விநியோகித்துள்ளார். அவரது கொலை தொடர்பான இந்தக் காட்சி ஜப்பான் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டதுடன், You tube இணையத்தளத்திலும் சேர்க்கப்பட்டுள்ளது. நகாய் என்ற ஊடகவியலாளர் தன்னை நோக்கி வந்த தோட்டாவினால் கொல்லப்படவில்லை எனக்கூறி பர்மா அரசு மேற்கொண்ட பிரசாரத்தின் உண்மைத் தன்மை இக்காட்சி வெளியிடப்பட்டவுடன் பெரும் கேள்விக்கு உட்படுத்தப்பட்டது. இராணுவ வீரர்கள் ஆயிரக்கணக்கான பௌத்த பிக்கு, பிக்குணிகளை மிருகத்தனமாக தடிகளினால் தாக்கும் காட்சிகளைக் கொண்ட படங்கள் மற்றும் வீடியோக் காட்சிகள் எண்ணிலடங்காத வகையில் பர்மாவுக்கு வெளியிலிருந்த ஊடகம் மற்றும் சிவில் அமைப்புகளுக்குக் கிடைத்த வண்ணமிருந்தன. இவற்றை யார் அனுப்பியதென்பதை அவற்றை வெளியிட்ட இணையத்தள முகவர்கள் கூட அறிந்திருக்கவில்லை.

இன்றைய அளவில் மிலிடரி நிர்வாகத்தால் பர்மாவின் மக்கள் கிளர்ச்சி அடக்கப்பட்டு மக்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளனர். இருந்தும் இந்த அடக்குமுறை எவ்வளவு நாள் நீடிக்குமென்பது சந்தேகமே. எப்படியோ பர்மா கடுமையான இணையத்தள கட்டுப்பாட்டையும் விதித்துள்ளது. இணையத்தள தொடர்புகள் தடுக்கப்பட்டு, இணையத்தளங்களுக்கு உட்புகும் வழிகள் மூடப்பட்டுள்ளன. கையடக்கத் தொலைபேசிகள் பறிக்கப்பட்டு அரசின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. எப்படி இருந்தும் பர்மா நடவடிக்கையாளர்கள் வேறு இணையத்தள அமைப்புகளுடன் இணைந்து அரசின் தடையையும் மீறி இணையத்தளங்கள் மூலம் தகவல்களைப் பரப்பும் புதிய தொழில்நுட்ப விதிகள் என்னவென்பதை தேடிக் கொண்டிருப்பதுடன் அதற்கு தேவையான நிதியை தேடிக்கொள்ள பாரிய அளவில் நிதி சேகரிக்கும் வழிமுறைகளையும் முடுக்கி விட்டுள்ளனர்.

பர்மா கிளர்ச்சி தொடர்பான வீடியோ மற்றும் புகைப்படங்கள், செய்திகளை பெற்றுக் கொள்ளக்கூடிய புளொக்ஸ் மற்றும் இணையத்தளங்கள் சில,

Mizzima News, The Irawaddy, Democratic Voice of Burma, Justice and Injustice
http://soneseayar.blogspot.com, http://mmedwatch.blogspot.com, http://ko-htike.blogspot.com,
http://mogokmedia.blogspot.com, Today Burma, Youtube

---

## கொழும்பு, குருநாகல் மற்றும் பதுளையில் குடிமக்கள் ஊடக செயலமர்வுகள்

குடிமக்கள் ஊடகத்தை இலங்கையில் பிரபலமாக்கும் நோக்குடன் நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் நடத்தப்படும் ஒரு நாள் செயலமர்வு தொடரின் மூன்றாவது நான்காவது மற்றும் ஐந்தாவது செயலமர்வுகள் முறையே ஒக்டோபர் 16, 18, 20ஆம் திகதிகளில் பதுளை, கொழும்பு மற்றும் குருநாகலையில் நடாத்தப்பட்டது. இந்த செயலமர்வுகளில் கலந்துகொண்டவர்களால் எழுதப்பட்ட குடிமக்கள் செய்திகள் சிலவற்றை இங்கு காணலாம்.



*கொழும்பு செயலமர்வின் போது*

## தனியார் பஸ் மாபியா

கடந்த வாரம் ஒரு நாள் தெமட்ட கொடைக்கு செல்வதற்காக பம்பலப்பிட்டியிலிருந்து அங்குலான - கிரிபத்கொடை 154 பஸ்ஸில் ஏறுவதற்காக அருகிலுள்ள பஸ் தரிப்பிடத்திற்குச் சென்றேன். அப்போது இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான 154 தடவழி பஸ்ஸொன்றும் தனியார் பஸ்ஸொன்றும் வந்தது. நான் இ.போ.ச. பஸ்ஸில் ஏறினேன்.

பயணம் ஆரம்பமானதிலிருந்து அடுத்த பஸ் தரிப்பிடம் வரை நான் சென்ற இ.போ.ச. பஸ் மேற் சொன்ன தனியார் பஸ் வண்டிக்குப் பின்னால் மெதுவாகச் சென்றது. எச்சந்தர்ப்பத்திம் எமது பஸ் எமக்கு முன்னால் சென்ற பஸ்ஸை முந்திச் செல்லவில்லை. இலங்கையில் சாதாரண பஸ் சேவைகள் குறித்து அறிந்திருந்த எனக்கு இந்த சாரதியின் நடவடிக்கை ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

நான் பயணம் செய்த பஸ் பயணிகளை ஏற்றுவதற்காக அடுத்த பஸ் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டது. இங்கும் எமது பஸ்ஸுக்கு முன்னால் மேற்படி தனியார் பஸ் நிறுத்தப்பட்டது. தனியார் பஸ்ஸின் நடத்துனர் நான் பயணம் செய்த பஸ் சாரதிக்கு அருகில் வந்து தமது விரல் இடுக்குகளில் மடித்து வைத்திருந்த 100 ரூபா நோட்டுகள் சிலவற்றை மிகத் தோழமையுடன் எமது சாரதியிடம் கொடுத்தார்.

**நிஷாந்த ப்ரீதிராஜ் - கொழும்பு செயலமர்வு**

# அபி பத்தரென்

எனது மாமா கொழும்பிலுள்ள ஒரு பத்திரிகை நிறுவனத்தில் வான் சாரதியாக பணி புரிகிறார். அவருக்கு சிங்களமும் நன்றாகத் தெரியும். அவர் ஒரு நாள் காலையில் அந்நிறுவனத்தில் தொழில் புரியும் நிருபருடன் வானில் சென்று கொண்டிருந்தார். அந்நிருபருக்கோ சிங்களம் தெரியாது. இருவரும் இராணுவ சோதனைச்சாவடியில் மறிக்கப்பட்டனர். மாமா வானில் இருந்து இறங்கி தனது அடையாள அட்டையையும், சாரதி அனுமதிப் பத்திரத்தையும் எடுத்துக்கொண்டு இராணுவத்தினரை நோக்கிச் சென்றார். அவரைத் தொடர்ந்து அந்நிருபரும் தனது அடையாள அட்டையுடன் சென்றார்.

“நீங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்” என்று இராணுவ வீரர் ஒருவர் சிங்களத்தில் கேள்வியெழுப்பினார்.

“அபி பத்தரென்” என்று மாமா சிங்களத்தில் விடையளித்தார்.

திடீரென அவருடன் சென்ற நிருபர் பதறிக் கொண்டு “பத்தரை இல்லை.... ஏழு அரை மணி...” என்று சொன்னார்.

இராணுவ வீரரின் சந்தேகம் அதிகரித்தது.

“நீங்கள் இரண்டு பேரும் என்ன உளறுகின்றீர்கள்? ....” என்று கோபத்துடன் கேட்டார் இராணுவ வீரர்.

“இல்லை சார் அவருக்கு சிங்களம் தெரியாது.... “பத்தரென்” என்றதும் அவர் “பத்தரை” என்று புரிந்துகொண்டு ஏழரை மணி என்று குறிப்பிட்டார். தமிழில் “பத்தரை” என்றால் நேரம் பத்து அரை (10.30) மணியைக் குறிக்கும் என்று மாமா சொன்னார்.

**சுகந்தி மணிமாறன்**
**கொழும்பு செயலமர்வு**

---

Citizen Journalism Awards 2006

# குடிமக்கள் ஊடக விருது

இங்கிலாந்தில் Press Gazzette இணையத்தளத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட Nokia குடிமக்கள் ஊடக விருது நிகழ்ச்சி 2006ஆம் ஆண்டு முதல் தடவையாக இடம்பெற்றது. இதன்போது குடிமக்கள் செய்தியாளர்களினால் இணையத்தளங்களிற்கு அனுப்பப்பட்ட புகைப்படங்கள் மற்றும் வீடியோப் பதிவுகளில் சிறந்தவை தேர்வு செய்யப்பட்டு விருதுகளும் வழங்கப்பட்டன. இங்கு காட்டப்பட்டிருப்பது முதலாவது இடத்தைப் பிடித்த புகைப்படம். 2005ஆம் ஆண்டு ஜுலை மாதம் 7ஆம் திகதி லண்டன் நகரில் பஸ்ஸொன்றில் இடம்பெற்ற குண்டுவெடிப்பை அடுத்து, சில விநாடிகளுக்குப் பின் சம்பவ இடத்திற்குச் சென்ற குடிமக்கள் செய்தியாளர் தனது கையடக்கத் தொலைபேசியில் பிடித்த படம் இது.



இந்தப் போட்டி தொடர்பான விவரங்களை கீழுள்ள இணைய முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.
**http://www.citizenjournalismawards.com/**

## இப்போது விகல்ப என்ற பெயரில் youtube வீடியோ அலைவரிசை

“விகல்ப” ஆசிரியர் குழுவால் youtubeல் வீடியோ காட்சிகள் செய்திகளுடன் இணைந்து Vikalpasl என்ற பெயரில் விகல்பவிற்காகவே ஒதுக்கப்பட்ட அலை வரிசையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. விகல்ப ஊடாக youtubeல் வெளியாகும் சகல வீடியோ காடசிகளையும் இதனூடாக ஒரே இடத்தில் எளிதாகப் பெற்றுக் கொள்ளலாம்.

**http://www.youtube.com/vikalpasl/**




## எமக்கும் மாற்றத்தை மேற்கொள்ள முடியுமா என்று பார்ப்போம்...

***“விகல்ப” குடிமக்கள் ஊடக இணையத்தளத்திற்கு எழுதுவோம்***

சமாதானம், மனித உரிமைகள், ஜனநாயகம், முறையான நிர்வாகம், ஆண் பெண் சமூக நிலை ஆகிய பரந்த துறைகளில் அன்றாடம் வாழ்ந்து கொண்டிருக்கும் நீங்கள் கேட்கும், பார்க்கும், அனுபவிக்கும் மற்றொருவருடன் பேசக்கூடியது என நினைக்கும் சம்பவங்கள் தொடர்பாக சுருக்கமாக எழுதி “விகல்ப”வுக்கு எழுதி அனுப்புங்கள். உங்களது குடிமக்கள் குறிப்புகள் வெளியிடப்படுவதுடன், பிற நபர்களின் குறிப்புகளை உங்களுக்கு விமர்சிக்கவும் முடியும். இது நேரடிப் பேச்சுக்கு அடிப்படையாகவும் அமையும்.

சிங்களத்திலோ, தமிழிலோ உங்களது ஆக்கங்களை “விகல்ப”வுக்கு எழுதுங்கள்.

மாற்று ஈ புலட்டின் தொடர்பாக உங்கள் கருத்துக்களை எழுதினால் அது எமது எதிர்கால வெளியீடுகளின் தரத்தை அதிகரிக்க உதவும். சில நிமிடங்களை செலவிட்டு இக் கேள்விகளுக்கு உங்கள் கருத்தை எழுதி எமக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

**http://tinyurl.com/2yd4cy**

குடிமக்கள் ஊடக வேலைத் திட்டம்

ஊடகப்பிரிவு, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்,
1சீ, 28ஆம் ஒழுங்கை, ஃப்ளவர் வீதி, கொழும்பு - 07
தொலைபேசி : 011-2375269, 011-2375012, தொலை நகல் : 011-2375623
contributions@vikalpa.org, editor@vikalpa.org, info@vikalpa.org